Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 31, 2021

செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 31, 2021 | ஒளி: 07 கதிர் 88 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## பரா ஒலிம்பிக்கில் இலங்கை வீரர் உலக சாதனை

முழுச் செய்தி P8

தென் ஆபிரிக்காவில்

# திரிபுடைய புதிய பிறழ்வு



தென் ஆபிரிக்காவில் கொவிட் வைரஸின் புதிய பிறழ்வு இனங்காணப்பட்டுள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவற்றில் இது மிகவும் திரிபுடையது என 'த ஜெருசலேம் போஸ்ட்' பத்திரிகையின் இணையப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் தொற்று நோய்களுக்கான தேசிய கற்கை மற்றும் குவாசுலு நட்டால் ஆராய்ச்சி நிறுவகத்தின் ஆய்வில் புதிய பிறழ்வு தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## அதிகாரிகள் உஷார்

தென்னாப்பிரிக்கா மற்றும் வேறு பல நாடுகளில் கண்டறியப்பட்ட புதிய கொரோனா மாறுபாடு குறித்து இலங்கையின் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கையான நிலையில் உள்ளனர்.

இலங்கையில் இந்த பிறழ்வு கண்டறியப்படவில்லை என்றாலும் இந்த மாற்றங்கள் உலகளவில் வேகமாகப் பரவி வருவதால், சுகாதார அமைப்பு எச்சரிக்கையுடன் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஆப்கானிஸ்தானை அவதானிக்கின்றோம்

மனிதாபிமான எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலாக, ஆப்கானிஸ்தானில் நிலவும் முன்னே ற்றங்கள் குறித்து இலங்கை தொடர்ந்தும் அவதானித்து வருவதுடன், அங்கு நிலவும் நிலைமைகள் குறித்து அக்கறையுடன் செயற்படுகின்றது என வெளிநாட்டலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. .

சர்வதேசப் பங்குதாரர்களின் உதவியுடன், ஆப்கா னிஸ்தானில் இருந்து தனது பிரஜைகளை வெளியேற்றுவதில் இலங்கை உதவிகளை வழங்கி வருகின்றது. 2021 ஓகஸ்ட் 29 வரை, இலங்கையர்கள் 66 பேர் வெளியேற்றப்ப ட்டிருப்பதுடன், ஏழு (07) பேர் வெளியேற்றப்படவுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஊரடங்கு திருமணத்தால் புதுமணத் தம்பதிக்கு சிக்கல்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி திருமணம் நடத்திய மணமக்கள் உள்ளிட்ட 28 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று முந்தல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது. இந்த ஊரடங்கு திருமணம் மதுரங்குளி பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

ஊரடங்கு உத்தரவின் போது, மதுரங்குளிய - கனமுல்ல பகுதியிலுள்ள வீடொன்றில் "ஊரடங்கு திருமணம்" நடைபெறுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## பொட்ட நௌபரின் சடலம் அடக்கம்



கொரோனா தொற்றினால் உயிரிழந்த 'பொட்ட நௌபர்' என்றழைக்கப்படும் மொஹமட் நௌபரின் சடலம், அடக்கம் செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு ஓட்டமாவடியிலேயே அவரது சடலம், நேற்று (30) அடக்கம் செய்யப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகள் ஓகஸ்ட் 29ஆம் திகதியன்று இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## ரிஷாட் மனைவியின் பிணை மனு நிராகரிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மனைவி உட்பட நால்வரையும் செப்டெம்பர் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, நேற்று (30) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



## வீடு வரை வந்த சடலம் தகனசாலைக்கு சென்றது

### இறுதி கிரியையில் பங்கேற்றவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

செ.கீதாஞ்சன்

உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் சடலத்தை மீண்டும் பொதுச் சுகாதார அதிகாரிகளால் மீளப் பெற்ற சம்பவம் ஒன்று, புதுக்குடியிருப்பு - வள்ளுவர்புரம் பகுதியில், நேற்று (30) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## மருந்து மாபியா மூலம் இலஞ்சம் கொடுக்காதீர்

பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைக்காக அரசாங்கத்தால் அதிகூடிய விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளுக்குள் பாரிய மாபியா செயற்படுகின்றமை உறுதியாகியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி கூறினார் செந்தில் தொண்டமான்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபத் தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், தொலைப்பேசி ஊடாகத் தொடர்புகொண்டு, நன்றி தெரிவித்துகொண்டார்.

தொடர்ச்சி P2

## திருமலையில் விசேட சீல்

ரஸ்பீக் பாயிஸ்



திருகோண மலையில் மறு அறிவித்தல் வரை அனைத்து மதுபான சாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஏ.தர்மசீலனின் பணிப்புரைக்கு அமைய,

தொடர்ச்சி P2

## ஐ.நா., பாதுகாப்பு பேரவை அறிக்கையில் தலிபான்கள் பெயர் இல்லை

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில் நடந்த பயங்கரவாத சம்பவம் தொடர்பாக ஐ.நா., பாதுகாப்புப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில், தலிபான்கள் பெயர் இடம்பெறவில்லை.

தொடர்ச்சி P2

மனநலம் குன்றியோருக்கான மருந்துகள்

## போதைப்பொருள் பாவிப்போருக்கு அம்பிட்டியவில் விற்பனை

### 18 ஆயிரம் மருந்துகள் மீட்பு

சேஹன் செனவிரத்ன



மனநலம் குன்றிய நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு வழங்கப்படுவதாகக் கிடைத்த தகவலுக்கமைய, கண்டி- அம்பிட்டிய பிரதேசத்திலுள்ள மருந்து களஞ்சியலையொன்று,

தொடர்ச்சி P2

ஐ. நா. மனித உரிமை கூட்டத்தொடரில்

## இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு கிட்டும்

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உறுதி

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரின் ஒவ்வோர் அமர்வுகளின் போதும் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனத் தெரிவித்துள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.

தொடர்ச்சி P2






















## சர்வதேசத்திடம் நீதி கோரி வீடுகளுக்குள் போராட்டம்

சண்முகம் தவசீலன்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று (30) முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், வீடுகளில் இருந்தவாறே அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்சியாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ளதை கவனத்திற்கொண்டு, தத்தமது வீடுகளில் இருந்தவாறு, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.


இதன்போது, தமது வீடுகளில் நீதி கோரிய வாசகங்களை தாங்கிய வண்ணம், நீதியின் குறியீடாக மெழுகுவர்த்தி ஒளி ஏற்றி, நேற்றைய தினத்தை அடையாளப்படுத்தி, இந்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

'நாங்கள் இலங்கை அரசை நம்பவில்லை', 'சர்வதேச விசாரணையே வேண்டும்',

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# திரிபுடைய புதிய பிறழ்வு



இந்தத் தொற்று வேகமாக பரவுவதுடன், இதற்கான தடுப்பூசியின் பெறுபேறு மந்தமாகவே உள்ளதாகவும் குறித்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

C.1.2 என புதிய பிறழ்வு விஞ்ஞான ரீதியில் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திரிபு, கடந்த மே மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிய கொவிட் திரிபானது இதுவரை இங்கிலாந்து, சீனா, கொங்கோ, மொரஷியஸ், நியூசிலாந்து, போர்த்துக்கல் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளதாக 'த ஜெருசலேம் போஸ்ட்' பத்திரிகையின் இணையப்பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## அதிகாரிகள் உஷார்

புதிய ஆய்வின்படி, தென்னாப்பிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சி .1.2 மாறுபாடு, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மற்ற அனைத்து கொரோனா மாறுபாடுகளையும் விட அதிக தொற்றுநோயாக இருக்கலாம் என்றும் தற்போது கிடைக்கும் கொரோனா தடுப்பூசிகளைத் தவிர்க்கும் திறனைக் கொண்டிருக்கலாம் என்றும் உலக சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஆதிக்கம் செலுத்தும் டெல்டா வகையை விட சி .1.2 மிகவும் ஆபத்தானதா என்பதை விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர். மேலும் இதை உறுதிப்படுத்தும் வகையில் மேலும் ஆராய்ச்சிப் பணிகள் நடந்து வருகின்றன.

# பொட்ட நௌபரின் சடலம் அடக்கம்

அத்துடன், மரபணு பரிசோதனையும் நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சிறுநீரக நோய் மற்றும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நௌபர், சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட 'மொஹமட் நௌபர்' மரண தண்டனை



கைதியாக பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருந்து மாபியா மூலம் இலஞ்சம் கொடுக்காதீர்

அத்துடன், இந்த கொரோனா தொற்றுக்கு மத்தியில் தமது வர்த்தக நண்பர்கள் வருமானம் தேடுவதற்கான பின்னணியையும் ஏற்படுத்தியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் 2,000- 2,500 ரூபாய் வரை அன்டிஜன் பரிசோதனைகளுக்காக அறவிடப்படும் அதேவேளை, இதனை 600 ரூபாய்க்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளை 2,000 ரூபாய்க்கும் செய்ய முடியும் என்றார்.

எனவே, மக்கள் நலன் எனத் தெரிவித்து, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியின் ஆரம்பமே முட்டாள்தனமானது என்றார்.

கொரோனா பேரழிவில் மரணத்துக்கும் கொரோனாவுக்கும் இடையில் போராடும் அப்பாவி மக்களின் உயிர்களை பணயம் வைக்கும் மருந்து மாபியாக்களின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வர்த்தமானியை மாற்றுவது குறித்து, தற்போதைய அரசாங்கத்துக்கு மோசமான வரலாறு உண்டு என்றாலும் மக்கள் தொடர்பில் உண்மையான உணர்வு இருந்தால் பி.சி.ஆர் பரிசோதனை மற்றும் அன்டிஜன் பரிசோதனை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்து, புதிய வர்த்தமானியை வெளியிட வேண்டும் என்றார்.



# முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி கூறினார் செந்தில் தொண்டமான்

'தமிழகத்தில் மறுவாழ்வு மையங்ககளில் தங்கியிருக்கும் இலங்கை தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள், உட்கட்டமைப்பு வசதிகள், புலமைப்பரிசில், சுயதொழில் மற்றும் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற நலன்புரித் திட்டங்களை முன்னெடுத்தமைக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றியை இந்த உரையாடலின் போது செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.30 கோடி (இந்திய ரூபாவில்) ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை (ஓகஸ்ட் 27) அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் விசேட சீல்

திருகோணமலை மதுவரித் திணைக்கள அதிகாரி எஸ்.கே. வணிகசிங்கவின் வழிகாட்டலுடன், திருகோணமலை பிராந்திய மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ஜானி அத்தநாயக்க குழுவினரால், திருகோணமலையில் உள்ள அனைத்து மதுபான சாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டது.

மதுபான சாலைகளில், திருட்டுத்தனமாக மதுபான விற்பனை நடைபெறுவதாக திருகோணமலை மதுவரித் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக, அனைத்து மதுபான சாலைகளுக்கும் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நேற்று (30) பிற்பகல் முதல் மறு அறிவித்தல் வரை அனைத்து மதுபான சாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டதாகவும் திருகோணமலை மதுவரித் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.



# ரிஷாட் மனைவியின் பிணை மனு நிராகரிப்பு

ரிஷாட்டின் மனைவி மற்றும் மாமனார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவையும் நீதவான் நிராகரித்தார்.

முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப்பெண்ணாக வேலைசெய்தபோது, எரிகாயங்களுக்கு உள்ளாகிய தலவாக்கலை- டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி, பின்னர் மரணமடைந்தார். அந்தச் சம்பவம் தொடர்பில், அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ரிஷாட் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை, மைத்துனர், சிறுமியை வேலைக்குச் சேர்த்த தரகர் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருள் பாவிப்போருக்கு விற்பனை

நேற்று (30) சுற்றிவளைக்கப்பட்டது.

மருத்துவர்களின் எவ்விதப் பரிந்துரையுமின்றியே இந்த மருந்து விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதுடன், குறித்த சுற்றிவளைப்பின் போது, 17,000 போதை மாத்திரைகளும் கர்ப்பத்தைக் கலைப்பதற்கான 1,000 மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், மருந்தகம் ஒன்றையும் நடத்திச் செல்பவரென தெரிவித்துள்ள பொலிஸார், கைப்பற்றப்பட்ட மருந்துப் பொருள்கள், 1.7 மில்லியன் ரூபாய் பெறுமதியானது என்றும் தெரிவித்துள்ளனர்.

நாடுபூராகவும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் போதைப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால், மனநலம் குன்றியவர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு பாரிய கிராக்கி நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாதாரணமாக சந்தைகளில் 100 ரூபாய்க்கு விற்கப்படும் இவ்வாறான மருந்துகள் போதைப்பொருள் அடிமையானவர்களுக்கு மாத்திரம் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா., பாதுகாப்பு பேரவை அறிக்கையில் தலிபான்கள் பெயர் இல்லை

ஆப்கானிஸ்தான், தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக வந்துள்ளது. அங்கிருந்து வெளியேற ஆப்கானிஸ்தானியர்கள் மற்றும் மற்ற நாட்டினர் முயற்சித்து வருகின்றனர்

இந்நிலையில், காபூல் விமான நிலைய வாயிலில் சமீபத்தில் தற்கொலை படை தாக்குதல் நடந்தது. கடந்த 15ஆம் திகதி காபூலை தலிபான்கள் கைப்பற்றியபோது, ஐ.நா., பாதுகாப்பு பேரவை சார்பில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதில், 'தலிபான்கள் அல்லது ஆப்கனின் எந்த குழுவோ, தனிநபர்களோ, மற்ற நாடுகளில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், காபூல் விமான நிலையத்தில் நடந்த தாக்குதல் தொடர்பாக, 27ஆம் திகதியன்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு உள்ளது. அதில், 'மற்ற நாடுகளில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆப்கான் குழுக்கள் ஆதரவு அளிக்கக் கூடாது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தலிபான்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஐ.நா.,வுக்கான முன்னாள் இந்திய துாதர் சையது அக்பருதீன், இதை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா., பாதுகாப்புப் பேரவையின் தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் இந்த மாதம் இந்தியா வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானை அவதானிக்கின்றோம்

இந்நிலையில், இருபத்தி ஒரு (21) இலங்கையர்கள், ஆப்கானிஸ்தானில் இருப்பதற்குத் தெரிவு செய்துள்ளனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளிலிருந்து பயண அங்கிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள அனைவரும் ஆப்கானிஸ்தானிற்கு வெளியே பயணங்களை மேற்கொள்வதற்கு பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் அனுமதிக்கப்படும் என இலங்கை எதிர்பார்க்கின்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கு திருமணத்தால் புதுமணத் தம்பதிக்கு சிக்கல்

அந்தத் தகவலின் படி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சம்பவ இடத்துக்கு விரைந்த போது ஒரு குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். அந்த இடத்தில் இருந்த 09 குடும்பங்களைச் சேர்ந்த 28 நபர்கள் இருந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் அந்த வீட்டிலேயே தனிமைப்படுத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வீடு வரை வந்த சடலம் தகனசாலைக்கு சென்றது

புதுக்குடியிருப்பு - வள்ளுவர்புரம் பகுதியைச் சேர்ந்த 77 வயதான பெண்ணொருவர், கடந்த 21ஆம் திகதியன்று வீட்டிலேயே உயிரிழந்துவிட்டார்.

இதையடுத்து, அவரது சடலம், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அதிலிருந்து பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டன. அந்த பரிசோதனைக்காக அவை, யாழ்ப்பாணத்துக்கு 28ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் முடிவு வருவதற்கு முன்னரே, அப்பெண்ணின் சடலம் உறவினர்களிடம் வைத்தியசாலை நிர்வாகத்தால் நேற்று முன்தினம் (29) கையளிக்கப்பட்டது.

எனினும், அன்றைய தினம் (29ஆம் திகதி ) மாலை 5 மணிக்கு, கிடைக்கப்பெற்ற முடிவுகளில், அவருக்கு தொற்றியிருப்பது உறுதியானது.

இந்நிலையில், வள்ளுவர்புரம் பகுதியில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் இறுதிக் கிரியைகள் நேற்று (30) காலை இடம்பெற்றது. இந்த இறுதிக் கிரியை நிகழ்வில் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

வைத்தியசாலை நிர்வாகத்தால் குறித்த பெண் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக அறிக்கை கொடுக்கப்பட்டு, சடலம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக, உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை, சடலத்தைப் பொறுப்பேற்று, வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அங்கு சென்றனர். எனினும், தகுந்த ஆதாரத்தைக் கோரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் உயிரிழந்தவரின் உறவினர்கள் முரண்பட்டதுடன், நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டுக்கு எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

இதன்போது, அங்கு பதற்றம் நிலவியதால், அப்பகுதிக்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸார், புதுக்குடியிருப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கெங்கதீஸ்வரன் ஆகியோர் உறவினர்களிடம் உண்மை நிலையை எடுத்துரைத்தனர்.

அத்துடன், வைத்தியசாலை நிர்வாகத்தில் தவறு ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி, சடலத்தை மின்சார தகன சுடலையில் எரியூட்டுவதற்காக, வவுனியா மாவட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கிராமத்தில் பெரும் பரபரப்பபை ஏற்படுத்தியுள்ளதுடன், அச்சத்தையும் தோற்றிவித்துள்ளது.

அத்துடன், மரண வீட்டுக்கு பலர் சென்று வந்த நிலையில், அவர்களை இனங்கண்டு, அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு கிட்டும்

பீரிஸ், எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கை விவகாரத்தில் சாதகமான தீர்வு எட்டப்படும் என்றார்.

இலங்கை விவகாரம் குறித்து சர்வதேச அரங்கில் முக்கியமான பேச்சுவார்த்தைள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஜெனிவாவிலும் , செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி ஐ.நாவின் பொதுச் சபை கூட்டம் நிவ்யோர்க் நகரிலும் இடம்பெறவுள்ளன.

இவ்விரு கூட்டங்களிலும் இலங்கை தொடர்பிலான நிலைப்பாட்டை அந்நாடுகளில் உள்ள இலங்கைப் பிரதிநிதிகளிடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம் என்றார். .

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (30) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

"தெற்காசிய வலய நாடுகள் பல அடிப்படைப் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளன. மனிதப் படுகொலை, ஆட்கடத்தல், குண்டுத்தாக்குதல் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகள் தெற்காசிய வலய நாடுகளில் காணப்படுகின்றன. இலங்கை அனைத்து நாடுகளுடனும் நல்லிணக்கத்துடன் செயற்படும்.

"இலங்கையினால் பிற நாடுகளுக்கும் நெருக்கடிகள் ஏற்படவில்லை. எனினும், இலங்கை ஒவ்வொரு வருடமும் ஜெனிவா கூட்டத்தொடரில் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு விமர்சிக்கப்படுவது அதிர்ச்சியளிக்கிறது" என்றார்.

**"மனிதப் படுகொலை, ஆட்கடத்தல், குண்டுத்தாக்குதல் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகள் தெற்காசிய வலய நாடுகளில் காணப்படுகின்றன**

# சர்வதேசத்திடம் நீதி கோரி வீடுகளுக்குள் போராட்டம்

'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வருவது எப்போது?', 'உங்கள் இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்?', 'கால அவகாசம் வேண்டாம் - முறையான நீதி விசாரணையே வேண்டும்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை, உறவினர்கள் தாங்கியிருந்ததுடன், சர்வதேசத்திடம் நீதி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்தவும்

தடுப்பூசித் திட்டத்தை விரிபுபடுத்தி, வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கு முன்னுரிமைப்படுத்தி கொரோனா தடுப்பூசிகளை செலுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக நிலையங்களில் தடுப்பூசி வழங்கப்படுவது இல்லையெனத் தெரிவித்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டியே சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.



இருப்பினும் ஒருசில வைத்தியசாலைகளில் பிரத்தியேகமாக தடுப்பூசி வழங்குவதற்குரிய வசதிகள் இல்லை என்பதனால் இவர்கள் மீண்டும் தற்காலிக நிலையங்களுக்கு செல்லுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்தும் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர், அனைத்து வைத்தியசாலைகளிலும் கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான வசதிகள் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, வெளிநாடு செல்ல விரும்புவோர் அதற்கு தேவையான ஆவணங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதமையின் காரணமாக தடுப்பூசியை பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் உபுல் ரோஹன தெரிவித்தார்.

ஆகவே,தற்போதைய தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடர்பாக மீளாய்வு செய்து குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

## உயிரிழந்த கைதிக்கு கொரோனா தொற்று

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில், உயிரிழந்த கைதிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த கைதிக்கு மேற்கொள்ளப்பட்டப் பி.சி. ஆர் பரிசோதனையிலேயே அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.




இதேவேளை,உயிரிழந்த கைதி, கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றினால், 43 வருடங்களும் 6 மாதங்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்ட கைதியென சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக வைத்தியசாலை அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த கைதி உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோத துப்பாக்கிகளுடன்

## நான்கு சந்தேக நபர்கள் கைது



**ரஸீன் ரஸ்மின்**

தப்போவ சரணாலயத்தில் இரண்டு சட்டவிரோத துப்பாக்கிகள் உள்ளிட்ட உபகரணங்களுடன் நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமையும் (28) , ஞாயிற்றுக்கிழமையும் (29) இரண்டு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, தப்போவ சரணாலயத்தின் துத்தனேரிய பகுதியில் ஒரு கெப் துப்பாக்கி (வெடிமருந்து துப்பாக்கி) மற்றும் ஈய வெடிமருந்துகள் மற்றும் தீப்பெட்டிகள் உள்ளிட்ட சில உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், தப்போவ சரணாலயத்தில் உள்ள எரமுதுகஸ்வெள பகுதியில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமிருந்து 12 துளை துப்பாக்கி, வெடி மருந்து பொருட்கள், 03 மின்விளக்குகள் உள்ளிட்ட பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கருவலகஸ்வெவ வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தப்போவ சரணாலயத்தின் கைது செய்யப்பட்ட இருவரும், புத்தளம் வன்னாத்தவில்லு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் இருவரும் துத்தனேரிய பகுதியில் தங்கியிருந்து சட்டவிரோத துப்பாக்கியை பயன்படுத்தி காட்டு மிருகங்களை வேட்டையாடி வருவதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது .

அத்துடன், எரமுதுகஸ்வெள பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கருவலகஸ்வெ குடாமெதவாச்சிய பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் வேட்டையாடும் நோக்கில் சட்டவிரோத துப்பாக்கி மற்றும் உபகரணங்களுடன் தப்போவ சரணாலய எல்லைப்பகுதிகளுக்குள் நுழைந்துள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## 'அத்தியாவசிய பொருள் விலை உயர்வு'

### நிவாரணங்களை வழங்க வேண்டும்

சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நிவாரணங்களை வழங்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, சீனி இறக்குமதியின்போது ஒரு கிலோ கிராமுக்கு 100 ரூபாய்க்கும் அதிகமான இலாபத்தை ஈட்டுவதாகவும், அரசாங்கம் இதுதொடர்பில் விரைவாக தலையீடுகளை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



வருடத்துக்கு 7 இலட்ச மெட்ரிக் டொன் சீனி நாட்டுக்கு தேவைப்படுகிறது. இத்தொகை சீனியை இறக்குமதி செய்யும்போது 7 ஆயிரம் கோடி ரூபாயை இலாபமாக இறக்குமதியாளர்கள் பெறுகிறார் என்றார்.

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் அழகிரி சென்னையில் சந்தித்துப் பேச்சு





**சென்னை**

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரியை சந்தித்து பேசியுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னை நந்தனத்திலுள்ள கே.எஸ்.அழகிரி வீட்டுக்கு, நேற்றுமுன்தினம் சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் , அவரை சந்தித்து பேசினார். இருவரின் சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நீடித்திருந்தது. இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று கூறப்படுகிறது.

அமைச்சரின் குடும்ப உறுப்பினர்களுடன், கே.எஸ். அழகிரிக்கும் உள்ள நட்பு குறித்தும், இலங்கை தமிழர்களுக்கு, மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி வழங்கிய பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தை

## நாடவேண்டும்

நிதியத்தை நாடவேண்டும்

இலங்கை அரசாங்கம் உறுதியான பொருளாதாரத்தை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், சர்வதேச நாணய நிதியத்தை கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளார்.



தொடர்ந்துகருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், இலங்கையின் பொருளாதாரம் சிறந்த ஆரோக்கிய நிலையில் இல்லை என்பதை கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் நிதியமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பில் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்து தொடர்பாகவும் விவாதித்ததாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் கூறினார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய வளங்களைப் பயன்படுத்துவதே இதற்கான தீர்வு என தாம் நம்புவதாகவும் அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

70ஆவது ஆண்டுவிழாவில்

## 'இரத்தம் வழங்குகிறது சுதந்திரக் கட்சி'

கொரோனா வைரஸ் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி, நாடு முழுவதிலும் இரத்த தான நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனது 70ஆவது வருட பூர்த்தியை விழாவைக் கொண்டாடவுள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சுதந்திரக் கட்சியின் 70ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கட்சி கூட்டங்கள் எதனையும் ஏற்பாடு செய்யாது எனவும், எனினும் சுகாதாரப் பாதுகாப்பு




வழிகாட்டல்களுக்கு அமைய மத வழிபாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் இரத்த தான நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகளால் தேசிய இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இதற்கான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் தலைவர் சிறப்பு உரையாற்றுவார் என தெரிவித்துள்ளார்.

## 'பாலை வானம்' நூல் வெளியீட்டு விழா




ஈழத்தின் மூத்த தமிழறிஞரும், பன்னூலாசிரியருமான முத்தமிழ் ஞானி ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா (ஜே.எஸ். கே.ஏ.ஏ.எச். மௌலானா) இயற்றிய, ஐங்குறுநூறில் வரும் பாலைப் பாடலுக்கான விளக்கவுரை நூலான 'பாலை வனம்' நூல் வெளியீட்டு விழா zoom செயலியூடாகவும் இணைய வழியாக நேரடியஞ்சல் மூலமாகவும் உலகின் பல பாகங்களில் இருந்தும் 700 இற்கு மேற்பட்ட தமிழ் ஆர்வலர்கள் உட்பட தமிழ்ச் சங்கங்கள் இணைந்து சிறப்பித்தனர்.

இவ்விழா உலகளாவிய ஏகத்துவ மெய்ஞான சபையின் அங்கமான ஏகத்துவ மெய்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தமிழ்நாடு திருமுல்லைவாசலைச் சேர்ந்த அஸ்ஸெய்யித் மஷ்ஹூத் மௌலானா அல்-ஹாதியின் தலைமையில் விழா ஆரம்பமான இவ்விழாவில், வரவேற்புரை சங்கத்தின் செயலாளர் கவிஞர் கிளியனூர் இஸ்மாத்தும், இறை வாழ்த்துப்பாடலும் விழா அறிமுகவுரையும் சங்கத்தின் தலைவர் கலீபா, ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது மன்பஈயாலும் நிகழ்த்தப்பட்டது.

விழாத் தொகுப்பாளராக சென்னை புதுக்கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முரளி அரூபன் விழாவை சுவாரசியமாகவும் சிறப்பாக நெறிப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, பன்னாட்டுத் தமிழ் மன்ற உலக அமைப்பாளர் கவிமாமணி, முனைவர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் வாழ்த்துரையாற்றினார்.

இவர்,தனதுரையில்; மௌலானாவின் 'பாலை வானம்' நூலின் முன்னுரையை மேற்கோள்காட்டி அதில் 'முற்காலத் தமிழ் எவ்வாறிருந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகவும், அச்சொற்களை இன்றைய மக்கள் உபயோகிப்பதற்காகவும் அதற்குப் பல்லுடைக்கும் மொழிகள் என்ற பழிச்சொல் நீங்கவே இவ்வாறு எழுதினோம்' எனும் கூற்றை சிலாகித்தும் விபரித்தும் வாழ்த்தினார்.

தொடர்ந்து, நூலாசிரியர் கலீல் அவ்ன் மௌலானா பற்றிய அறிமுகக் காணொளியொன்று திரையில் காட்சிப்படுத்தப்பட்டு, தொடர்ந்து zoom காணொளியூடே தமிழ்நாடு திருமுல்லை வாசலில் இருந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலை விழாவுக்கு தலைமை தாங்கிய அஸ்ஸெய்யித் மஸ்ஊத் மௌலானா அல்-ஹாதி 'பாலை வனம்' நூலை வெளியிட்டு தலைமையுரையாற்றினார். நூலின் முதற் பிரதியை அஸ்ஸெய்யித் செய்யித் யாஸீன் மௌலானா பெற்றுக்கொண்டார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு

# இதுவரை தீர்வு இல்லை

எஸ்.சபேசன்



போர் மௌனிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ள போதும் வடக்கு, கிழக்கில் இருந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இலங்கை அரசாலோ அல்லது சர்வதேசத்தாலோ எந்த ஆக்கபூர்வமான தீர்வும் கிடைக்கவில்லையென மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சி ஊடகச் செயலாளரும், பட்டிருப்புத் தொகுதி இலங்கை தமிழரசு கட்சித் தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நேற்றைய (ஒக.30) சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பாக அவர் மேலும் கருத்துரைக்கையில், “சர்வதேச காணாமல் போனோர் தினம் இலங்கையில் இன்று முன்னெடுக்கப்பட்டுகின்றது.

“இனங்காணப்படாத பகுதிகளில் தடுத்து வைத்தல், உறவினர்களுக்கு தெரியாமலோ, சட்ட ரீதியிலான காரணங்களுக்காகவோ கைது செய்யப்பட்டதன் பின்னர் காணாமல் போனவர்கள் குறித்து விளக்கமளிக்கும் நோக்கில், இந்தத் தினம் முன்னெடுக்கப்படுகின்றது.

“இலங்கையில் நடைபெற்ற 30 வருட கால யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் ஏராளமானவர்கள். இவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்று கூட தெரியாமல் அவர்களது உறவினர்கள் இன்று வரை தேடி வருகின்றனர்.

“இதற்காக நாள்களைக் கடந்து, வாரங்களைக் கடந்து, மாதங்களைக் கடந்து வடக்கு, கிழக்கில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுகின்றன.

“போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், பேரணிகள் என பல முயற்சிகளை முன்னெடுத்த போதும் இவர்களுக்கு இன்று வரை எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

“ஆட்சிகள் மாறினாலும் வட, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. சர்வதேசத்தின் மூலமாகவும் நீதி பெறப்படாமல் தொடர்ச்சியான போராட்டங்களை எமது மக்கள் தினமும் செய்து கொண்டே உள்ளனர்.

“எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 44ஆவது கூட்டத் தொடர் நடைபெறுவதற்கு முன்னதாக சர்வதேச குற்றவியல் விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றமூடாகவோ அல்லது சர்வதேச குற்றவியல் விசேட தீர்ப்பாயம் ஒன்றினூடாகவோ நடத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

“இனியும் காலம் கடத்தாமல், எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சரியான நீதி கிடைக்கவேண்டும் என்பதை இன்றய நாளில் மீண்டும் வலியுறுத்துவோம்” எனவும் மேலும் கூறினார்.







### காத்திருப்பு...

தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், 30 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு கொவிட் 19 இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை, நேற்று (30) முன்னெடுக்கப்பட்டது.
இத்தடுப்பூசியை பெற, குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் மக்கள் நீண்ட வரிசையில் ஆர்வமாக காத்திருந்து தடுப்பூசியைப் பெற்றனர்.
(படங்கள் – ஹஸ்பர் ஏ ஹலீம்)

மட்டு. வாகரை களப்பு

## அபிவிருத்தியில் அமைச்சர் கரிசனை

மட்டக்களப்பு, வாகரை களப்பை ஆழப்படுத்தி கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்க தீர்வு காண்பது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

வாகரை களப்புப் பகுதியை கடற்பகுதியோடு இணைக்கும் பகுதியில் மணல் நிரம்பி மூடியுள்ளதுடன் நீண்டகாலமாக களப்பு பிரதேசம் ஆழப்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.

குறித்த களப்பை தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், மணல் மேட்டினையும் அகற்றித் தருமாறு, பிரதேச கடற்றொழிலாளர் மற்றும் அமைப்புக்கள் தொடர்ச்சியாக கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்து வந்தன.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (30) கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், வாகரை பிரதேச கடற்றொழில்சார் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறும், சம்மந்தப்பட்ட தரப்புக்களிடம் இருந்து தேவையான அனுமதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

அத்துடன், குறுகிய காலவரையறைக்குள் தேவையான அனுமதிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு, அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், நந்திக்கடல் மற்றும் அருகம்பை களப்புகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன.



## நகை திருட்டு; நபர் கைது



எம்.எஸ்.எம்.ஹனீபா

அக்கரைப்பற்றில் வீடொன்றை உடைத்து சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 18 பவுன் நகை மற்றும் 65 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடி சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை, அக்கரைப்பற்று பொலிஸார் நேற்று முன்தினம் (29) கைது செய்தனர்.

அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்ட நபர், சனிக்கிழமை (28) வீட்டின் கூரையை உடைத்து, பணம் மற்றும் நகையை திருடியதாக அக்கரைப்பறு பொலிஸ் நிலையத்தில், வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டையடுத்து மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவர் சி.சி.டி.வி கமெராவில் பதிவாகியுள்ளதாக பெரும் குற்றப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஏ.எல். அசீம் தெரிவித்தார்.

திராய்மடுவில்

## ஒன்பது பேருக்கு தொற்று உறுதி

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, திராய்மடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதற்கமைவாக, மாவட்டத்தின் பல பகுதிகளில் சுகாதாரத் துறையினரால் ரபிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மண்முனை வடக்கு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட திராய்மடு பகுதியில் அன்டிஜன் பரிசோதனைகள் நேற்று முன்தினம் (29) மேற்கொள்ளப்பட்டன.
இதன்போது, கர்ப்பிணிகள், 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 61 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 09 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

சர்வதேசம் கூட

# ‘இன்று வரை பதில் தரவில்லை’



சண்முகம் தவசீலன்

சர்வதேசத்திடம் தொடர்ச்சியாக நீதி கோரியும் தமக்கான ஒரு நல்ல பதிலை, சர்வதேசம் கூட இன்று வரை தரவில்லையென்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத் தலைவி, செயலாளர் ஆகியோர், நேற்று (30) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

இதன்போது, கருத்துரைத்த சங்கத்தின் செயலாளர் பிரபாகரன் றஞ்சனா, மக்களுக்கு தெரியாமல் இரகசியமான முறையில், காணாமல் போனோர் அலுவலகங்கள உருவாக்கப்படுவதன் மர்மம் என்ன என்பது கூட விளங்காமல் இருக்கின்றது என்றார்.

‘இந்த அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவை அமைச்சர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வெளிநாடுகளில் இருக்கலாம் என்று தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு தெரியாமல் எங்களுடைய உறவுகள் வெளிநாடு செல்வதற்கு வாய்ப்பே இல்லை. எனவே, எங்களுடைய உறவினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி இருந்தால், அவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுங்கள்’ என்றும், அவர் தெரிவித்தார்.

அண்மையில், கொழும்பில் இருந்து புலனாய்வுப் பிரிவினர் வருகை தந்து, ‘உங்களுடைய மகன் கொழும்பில் இருக்கிறார். வாருங்கள் பார்ப்போம்’ என்று, தன்னிடம் கூறினார்கள் என்றும் ஆனால், அங்கு அவர் இருக்கிறார் என்பதை உறுதிபடுத்துவதற்கு, புகைப்படத்தைக் கொண்டு வந்து காட்டுமாறும் அல்லது தொலைபேசி ஊடாக அவரோடு கலந்துரையாடுவதற்கு ஒழுங்கு செய்து தருமாறும் கடந்த மாதம் 31ஆம் திகதி வந்தவர்களிடம் கோரியிருந்ததாகவும் ஆனால், இன்று வரை எந்தவிதமான பதிலும் இல்லை என்றும், பிரபாகரன் றஞ்சனா கூறினார்.

இவ்வாறான இழுத்தடிப்பு செயற்பாடுகளை தவிர்த்து, ஐக்கிய நாடுகள் சபையின் 48ஆவது கூட்டத் தொடரிலேனும் தங்களுடைய பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து, நல்ல பதிலை, சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் எனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

எமது உறவுகளை சர்வதேசம்

## ‘நிரந்தரமாக காணாமல் ஆக்கப்போகிறதா?’

எஸ்.றொசேரியன் லெம்பேட்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை நிரந்தரமாக காணாமல் ஆக்குவதற்கே, சர்வதேசம் செயற்பட்டு வருவதாக, மன்னார் மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

அத்துடன், தாங்கள் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், சர்வதேசம் தங்களை திரும்பிப் பார்க்காமல் இருப்பதாகவும், அவர் குற்றஞ்சாட்டினார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினத்தையொட்டி, மன்னாரில், நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை ஒவ்வொரு வருடமும் நினைவு கூர்ந்து வருவதாகவும் ஆனால், இவ்வாறு அனுஷ்டிப்பதால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை எனவும் கூறினார்.

இந்த அரசாங்கத்திடம் இருந்து சர்வதேசம் நீதியை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில், பல வருடங்களாக தாங்கள் வீதிகளில் நின்று போராடி வந்ததாகத் தெரிவித்த அவர், ஆனால் தங்களை சர்வதேசம் திரும்பி பார்ப்பதாக இல்லை எனவும் இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை எனவும் கூறினார்.

‘ இலங்கையில் எவரும் காணாமல் போகவில்லை. காணாமல் போனவர்கள் என கூறப்படுகின்றவர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் என்று ஆளும் அரசியல்வாதிகள், கூறுகிறார்கள்.


‘எனவே, வெளிநாடுகளில் இருக்கிறார்கள் என கூறப்படுகிற எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை அரசாங்கம் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்’ என்றும், அவர் தெரிவித்தார்.

மேலும் மன்னாரில் இரகசியமாக திறக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில் இருந்து தங்களுக்கு இதுவரை எவ்வித உதவிகளும் செய்யப்படவில்லை எனவும், அவர் குற்றஞ்சாட்டினார். எனவே, இந்த வருடத்துக்குள் தங்களுக்கு சர்வதேசம்; நீதியை பெற்றுத்தர வேண்டும் என்றும் வலியுறுத்திய அவர், சர்வதேசத்தின் செயற்பாடுகளைப் பார்க்கின்ற போது, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து சர்வதேசம் நாடகம் ஆடிக்கொண்டு இருக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்படுவதாகவும் கூறினார்.



## தங்க மயிலில் அருள்காட்சி...






நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 17ஆவது நாள் திருவிழாவான திருக்கார்த்திகை திருவிழாவையொ ட்டி, நேற்று முன்தினம் (29) மாலை, நல்லூர் முத்துக்குமார சுவாமி, தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி அருள்காட்சி அளித்தார். (படப்பிடிப்பு: எம்.றொசாந்த்)

நிதி கிடைக்காமையால்

## ‘உலருணவு பொதிகள் வழங்குவதில் நெருக்கடி’

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தில், தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு, 10,000 ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகளை வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக, மாவட்டத்தில் உள்ள கூட்டுவுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில், தற்போது அதிகரித்துள்ள கொரோனா தொற்றாளர்கள் காரணமாக, அதிகளவான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, அரசாங்கத்தால் 10,000 ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு, அந்த உலருணவுப் பொதிகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கான நிதி, தமக்கு கிடைக்கவில்லை எனவும், மாவட்டத்தில் உள்ள கூட்டுவுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன. ஆனால், உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான பட்டியல்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்று வருகின்றன என்றும், கூட்டுவுறவுச் சங்கங்கள் கூறுகின்றன.

மேலும், பொருள்களை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் தம்மிடம் பெறப்பட்டதாகவும் ஆனால், தற்போது அனைத்து பொருள்களின் விலைகளும் அதிகரித்துவிட்டதால், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்களை வழங்குவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனை தொடர்புகொண்டு வினவிய போது, தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்களை வழங்குவதற்கான நிதியை திறைசேரியிடம் கோரியுள்ளதாகப் பதிலளித்தார்.

எனவே, அந்த நிதி கிடைத்ததும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் எனவும், அவர் தெரிவித்தார்.

# பஞ்சம் ஏற்படும் அபாயம்

### எச்சரிக்கின்றார் வேலுகுமார் எம்.பி

நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்தப்போவதாக ஆட்சிபீடமேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், 'பாண் வரிசை', 'கூப்பன் முறை' உள்ளடங்கலான பஞ்ச யுகத்தை நோக்கியே நாட்டை மீண்டும் அழைத்துச் செல்வதாகத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், "ஆளுந்தரப்பின் முறையற்ற முகாமைத்துவம், உறுதியற்ற கொள்கைகளால் நாட்டு மக்களே பேராபத்தை எதிர்கொண்டுள்ளனர்" என்றார்.

கண்டியில் நேற்று (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்து தெரிவித்த அவர்,



" அரசாங்கத்தின் தெளிவற்ற - உறுதியற்ற நிதி முகாமைத்துவ கொள்கையால் பெரும் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை மூடிமறைப்பதற்கும், தற்காலிக சமாளிப்புக்காகவுமே வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல உணவு மற்றும் மருந்து இறக்குமதிக்கும் கோட்டா முறைமை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் உள்ளது.

"எனவே, இன்னும் ஒரிரு மாதங்களில் இந்நாட்டில் உணவு பண்டங்களை பெறமுடியாத நிலைமை உருவாகும். 1970களில் ஏற்பட்ட பஞ்சம்போல வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலையும், கூப்பன் முறைகூட அறிமுகப்படுத்தப்படலாம். தற்போதே பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளதால், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இதைவிடவும் மோசமானதொரு நிலைமை உருவாவதை தடுக்க வேண்டும்.

"இதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுகளை நடத்தி தீர்வுத் திட்டங்களை வகுக்குமாறும், அப்போதுதான் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் எனவும் அரசாங்கத்துக்கு நாம் ஆலோசனை வழங்கி வருகின்றோம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடன் பேசமாட்டோம் என ஆளுந்தரப்பு முரண்டு பிடிக்கின்றது" என்றார்.

## அடையாளம் காட்ட தாமதம்; 11 சடலங்கள் தேக்கம்

■ ஆ.ரமேஸ்




நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில், கொரோனா தொற்றால் உயிரிழந்த 11 பேரின் சடலங்கள், தகனம் செய்ய முடியாமல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, சிகிச்சை பலனின்றி கடந்த 28ஆம் திகதி முதல் நேற்று (30) வரை 11 கொரோனா உயிரிழப்புகள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சம்பவித்துள்ளது.

இவ்வாறு பதிவாகியுள்ள கொரோனா சடலங்களை, உறவினர்கள் அடையாளம் காட்ட தாமதமாவதால், இவை தகனம் செய்யப்படாமல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளர் அடங்கிய குழுவினருடன் கலந்துரையாடப்பட்ட பின்னர், சடலங்களை தகனம் செய்வதற்கும், சடலங்களுக்குரிய உறவினர்களை வரவழைத்து சடலத்தை அடையாளம் காண்பிக்கவும் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கூட்டம் குழுமியதால்

## அத்தியாவசிய கடைகளுக்கும் பூட்டு

■ இரா.யோகேசன்

கினித்தேனை நகரம் கடந்த சில நாள்களாக அத்தியாவசிய தேவைக்காக மாத்திரம் திறக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று (30) கினிகத்தேனை நகரில் மக்கள் தொகை அதிகரித்ததால், அத்தியாவசிய பொருள்கள் விற்பனை நிலையத்தை மூடுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர்.

நேற்று (30) கினிகத்தேனை நகரை அணிமித்த பிரதேச மக்களுக்கு, கினிகத்தேனை மத்திய மகா வித்தியாலயத்தில் தடுப்பூசி செலுத்தம் பணிகள் முன்னெடுக்கப்பட்டதால், நகருக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

இதனையடுத்து, அத்தியாவசிய பொருள்கள் விற்பனை நிலையத்தை



தற்காலிகமாக மூடி, பிற்பகல் 2 மணிக்கு பிறகு திறக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியதையடுத்து, வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

இதனால் காலையில் பொருள் கொள்வனவுக்காக சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

### தொற்றுக்குள்ளான தாயும் சேயும்

## நலத்துடன் வீடு திருப்பினர்

■ பாலித ஆரியவன்ஸ

கொரோனா தொற்றுக்குள்ளான கர்ப்பிணியொருவர், சத்திரசிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்ட சிசுவுக்கும் தொற்று உறுதியான சம்பவம் பதுளை பொதுவைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான 29 வயதுடைய கர்ப்பிணியொருவர், சத்திரசிகிச்சை மூலம் சிசுவொன்றை பிரசவித்துள்ளார். எனினும் அச்சிசுவுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், தாய் மற்றும் சேயுக்கும் பதுளை பொது வைத்தியசாலை தரப்பினரால், மிகுந்த அவதானத்தின் மத்தியில் சிகிச்சையளிக்கப்பட்டு, மிகவும் பாதுகாப்பாக தொற்றிலிருந்து மீட்டு, சுகதேகிகளாக வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

### விறகு கொண்டு சென்ற லொறி

## வீதியில் கரணமடித்தது

■ எஸ்.சதீஸ், எஸ்.கணேசன், ரஞ்சித் ராஜபக்ஸ

மொரட்டுவையிலிருந்து பூண்டுலோயாவுக்கு தேயிலைத் தொழிற்சாலையொன்றுக்கு 20 தொன் விறகுகளைக் கொண்டு சென்ற லொறியொன்று, அதிக வேகம் காரணமாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் (29) இரவு 9.30 மணியளவில் ஹட்டன்-குடாகம பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மலையகத்தில் நிலவும் சீரற்ற வானிலையுடன் பிரதான வீதிகள் வழுக்கும் தன்மையில் இருப்பதால், அதிக வேகத்துடன் பயணித்த குறித்த லொறி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது லொறியின் சாரதி, உதவியாள் மற்றும் இன்னொரு நபரும் லொறியில் இருந்துள்ள நிலையில், உதவியாள் மாத்திரம் படுகாயமடைந்து, டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









## மலையகத்தில் விதிவிலக்கு

கொரோனா பரவலால் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மலையகத்தின் பிரதான நகரங்களான நுவரெலியா, ஹட்டன், நோர்வூட் உள்ளிட்ட சில நகரங்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு, வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு, வாகனப் போக்குவரத்தும் பரவலாகக் காணப்படுகின்றது.
(படங்கள் – ரஞ்சித் ராஜபக்ஸ)

### ஸ்புட்னிக் இரண்டாம் டோஸ் குறித்து

## 'அச்சம் வேண்டாம்'

### விசேட வைத்தியர் கோரிக்கை

■ மொஹொமட் ஆஸிக்

ஸ்புட்னிக் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ், எதிர்காலத்தில் கிடைக்க உள்ளதாகவும் அது பற்றி கண்டி மாவட்டத்தில் யாரும் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் கண்டி மாவட்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் பசன் ஜெயசிங்க தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் நடைபெற்ற கொவிட் தடுப்பு ஒழுங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

"முதலாவது டோஸ் செலுத்தல் நடவடிக்கையின் போது , 30 வயதுக்கு மே ற்பட்ட 97சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதென தெரிவித்த அவர், எனவே, ஸ்புட்னிக் இரண்டாம் டோஸ், கண்டி வாழ் மக்களுக்கு வெகு விரைவில் வழங்கப்படவுள்ளதால், இது குறித்து எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை" என்றார்.

"அத்துடன், கண்டி மாவட்டத்தில் தடுப்பூசி மையங்களுக்குச் செல்ல முடியாத 25,000 க்கும் மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு, தடுப்பூசி வழங்கல் செயல்முறை துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.

" இதேவேளை, அடுத்த மாத நடுப்பகுதியில் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தல், 85 சதவீதமாக அதிகரிக்கும்" என்றும் டொக்டர் பசன் ஜெயசிங்க தெரிவித்தார்.

## தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டு

■ மொஹொமட் ஆஸிக்

இலங்கை புலம்பெயர் மக்களது மறுவாழ்வு முகாம்களுக்கு 317 கோடி ரூபாயை ஒதுக்கிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவியஅறக்கட்டளை மற்றும் சர்வதேச மனித உரிமைகள் நலன்புரி அபிவிருத்தி அறக்கட்டளை என்பன பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கும் அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவியஅறக்கட்டளை மற்றும், சர்வதேச மனித உரிமைகள் நலன்புரி அபிவிருத்தி அறக்கட்டளை என்பவற்றின் தலைவர் என். கருணாகரன்



பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "இந்தியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை மக்கள் இதன் பிறகு அகதிகள் அல்ல என்றும், அவர்கள் வாழும் முகாம்கள் அகதி முகாம்கள் அல்ல என்றும் தெரிவித்து, அவை இதன் பிறகு மறுவாழ்வு முகாம் என்று அழைக்கப்படும் என்றும் தமிழக முதல்வர் அறிவிப்பு விடுத்துள்ளார். இது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் உந்து சக்தியாக உள்ளது.

"அத்துடன், மேற்படி முகாம்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக இந்திய ரூபாயில் 317 கோடியை ஒதுக்கி இருப்பது சாதாரண விடயமுமல்ல.

"எனவே, இவ்வளவு காலமாக யாரும் மேற்கொள்ளாத ஒரு பாரிய பணியை முதல்வர் மு.க. ஸ்டாலின் மேற்கொண்டது தொடர்பாக தமது அமைப்பு பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

### நுவரெலியா மாவட்டத்தில்

## 26,690 பேருக்கே 2,000 ரூபாய்

### ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு

■ நிலமேகம் பிரசாந்த், பி.கேதீஸ், துவாரகஷன்

நுவரெலியா மாவட்டத்தில் மொத்தமாக 26,690 பேருக்கு மாத்திரமே, 2,000 ரூபாய் வழங்குவதற்கு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன், இதற்கமைய, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மய்யப்டுத்தி இந்தக் கொடுப்பனவு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றார்.



கொரோனா தொற்றால் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுக்கமைய, அன்றாட வருமானத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு மாத்திரம், அரசாங்கத்தால் இரண்டாயிரம் ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் 2,000 ரூபாய் நிவாரணத்தொகையில் பிரச்சினை இருப்பதாக தெரிவித்து வருகின்ற நிலையில், இத்தொகை சமூர்த்தி பயனாளிகள், முதியோர் கொடுப்பனவை பெறுபவர்கள், மாதாந்த சம்பளத்தை பெறுபவர்கள் என்போரை தவிர்த்து, ஊரடங்கு காலப்பகுதியில் அன்றாட வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கே வழங்க அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்றார்.

# சவப்பெட்டிகளை பத்திரமாய் பதுக்கி வைத்துக் கொள்வீர்களா?

சிலருக்கு எவ்வாறுதான் இடித்துரைத்தாலும், எதுவுமே தலைக்கு ஏறப்போவதில்லை. நான் என்ற அகந்தை மனதை விட்டு நீங்காவிடின், என்னதான் கூறினாலும், அவ்வாறானவர்களுக்கு ஏறவே ஏறாது. நமது நாட்டிலுள்ள சில பெருமுதலைகளின் செயற்பாடுகளைப் பார்க்குமிடத்து, வெட்கித் தலைகுனியச் செய்கிறது.

இது கொரோனா காலம். இல்லை இல்லை, "சூப்பர் கொரோனா" காலமிது. வீடுகளிலிருந்து வெளியேறுவதற்கே மக்கள் அஞ்சுகின்றனர். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும் சட்டரீதியாகவும் சட்டவிரோதமான முறையிலும் வர்த்தகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படத்தான் செய்கின்றன.

இதில், அத்தியாவசிய சேவைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்திக்கொள்ளும் சில பெருமுதலைகள், தான்தோன்றித்தனமாக கண்களை மூடிக்கொண்டு பொருட்களின் விலைகளை கேட்க முடியாதளவுக்கு உயர்த்தி, உச்சி குளிர்ந்துகொண்டிருக்கின்றனர். போதாமைக்கு பதுக்கிவைத்து, செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்கிவிட்டனர்.

கொரோனா ஒரு பொது எதிரி, அதிலிருந்து தப்பிக்கவேண்டுமாயின், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவே வேண்டும். இல்லையேல் கொரோனா கொன்றேவிடும். அவ்வாறானவருக்கு சவப்பெட்டிகளைத் தேடுவதே சிரமான காரியமாக இருக்கிறது.

கொரோனாவுக்கு முன்பான காலத்தில், மரண வீடென்றால், ஆகக்குறைந்தது 3 நாள்களுக்கேனும் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் இது, இன, மதங்களுக்கு இடையில் வேறுபடும். ஆனால், கொரோனாவில் மரணிப்போர், வீடுகளுக்கு கொண்டுவரப்படாமலே எரியூட்டப்படுகின்றனர் அல்லது புதைக்கப்படுகின்றனர்.

இந்த கொரோனா காலத்தில் பலரும் அரைவயிறும் கால்வயிறும் உண்டு, உயிர்மூச்சை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். பால் தேனீரே பலருக்கு ஒருவேளை உணவாகிறது. ஆனால், சீனிக்கும் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டமையால், பலரும் அந்த கால்வயிற்றையேனும் நிரப்பமுடியாது திண்டாடுகின்றனர்.

இந்நிலையில், பதுக்கிவைக்கப்பட்டிருந்த பல தொன்கள் கைப்பற்றப்படுகின்றன. கொரோனாவினால் மக்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில், யாருக்காகப் பதுக்கி வைக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

விலையுயர்ந்த, ஜோடனை செய்யப்பட்ட சவப்பெட்டிகளைக் கொள்வனவு செய்யும் காலம் மலையேறி, காட்போட் சவப்பெட்டிகளுக்குள் வைத்து எரியூட்டும் துர்ப்பாக்கியமான நிலைமையொன்று ஏற்பட்டிருக்கும் நிலையில், பதுக்கலில் ஈடுபடும் பெருமுதலைகள், தங்களுடைய வீடுகளில் சவப்பெட்டிகளையும் வாங்கி வைத்துகொள்வார்களா?

ஒவ்வொன்றும் ஒவ்வொன்றோடு பின்னிப்பிணைந்து இருப்பதே வாழ்க்கையாகும். நுகர்வோர் உயிருடன் இல்லையேல் பெருமுதலைகளும் கடல்நீரை குடிக்கவே வேண்டும். கொள்ளை இலாபம், சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களை பதுக்கிவைத்து கொள்ளை இலாபமீட்டும் சின்னத்தனமான எண்ணத்தை கைவிட்டு, சாதாரண பொதுமகனைப் பற்றியும் சிந்திக்கவேண்டும்.

"நான்" எனும் அகந்தையுடன் நிற்காமல் "நாம்" என நினைத்தாலேயே பல பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைக் காணமுடியும். ஆகையால், சாதாரண மக்களின் வயிற்றில் அடிக்காமல், ஒருவேளை உணவாக, பால் தேனீரையாவது பருகி, வயிற்றை கால், அரைவாசியாக நிரப்பிக்கொள்வதற்கு சகலரும் வழிசமைத்துகொடுக்கவேண்டும் என வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

அனேகமான காதலர்களில் ஒருசிலரின் காதல் தானாக உருவாகுவதில்லை. நண்பர்கள், தோழிகள் மற்றும் நெருங்கிய உறவுகள் உருவாக்கிவிடுகின்றார்கள். வலிந்து புகுத்தப்படும் காதல் நிலையாக இருக்குமா? என்பது கேள்விக்குறியது.

நண்பர்களில் சிலர் தங்களின் உறவுக்கார ஆண் அல்லது பெண்களை தங்களைது நட்பைக்காட்டி, தங்கள் நண்பனுக்கு சேர்த்து வைத்தும் விடுகின்றார்கள். இதுகூட ஒரு கட்டாயக் காதல்தான்!

முன்னேற வேண்டிய அநேகமான இளைஞர், யுவதிகள் தங்கள் எதிர்காலத்தை மறந்து காதல் வலையில் புகுந்து கொள்கின்றார்கள்.

படித்து நல்ல நிலைக்கு வருமுன் காதலிப்பதே ஒரு கௌரவம் என எண்ணி பெற்றோர் நிலையையும் கருதாமல் திருமணம் புரிந்து அல்லல்படுவது நாங்கள் அறிந்த விடயம்.

பொறுமை, நிதானம், குடும்ப பொறுப்பை உணராமல், அண்ணன், திருமணமாகாத அக்கா, தங்கைமார் பற்றி எதுவிதமான கடமைகளையும் செய்யாமல் தப்பித்துக் கொள்வதும் சுயநலம் அல்லவா? கண்மூடித்தனமான காதல் இயல்புக்கு முரணானது.

பருத்தியூர்
பால- வயிரவநாதன்

## முஸ்லிம் அரசியல்:

# ஆடத் தெரியாதவர்களின் மேடை

மொஹமட் பாதுஷா

உழவு இயந்திரங்கள் எல்லாக் காலத்திலும் ஏதாவது ஒரு பயனைத் தந்து கொண்டே இருக்கும். உழவுதல், இரண்டாம் முறை கிண்டுதல், அறுவடை செய்தல் மற்றும் ஏனைய சரக்கு போக்குவரத்து வேலைகளுக்கு அது பயன்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஆனால் 'ஹார்வெஸ்டர்' என்று அழைக்கப்படுகின்ற அறுவடைக்கு மட்டுமான இயந்திரங்கள் அறுவடைக் காலத்தில் மாத்திரமே பயன்படுகின்றன. அறுவடைப் பருவகாலம் வந்து விட்டால் வெளியில் எடுத்து, மினுக்கி பயன்படுத்தி விட்டு பிறகு அப்படியே மாதக் கணக்காக மூடி வைத்து விடுவார்கள்.

அரசியல்வாதிகள் அதிலும் குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் இதுபோவே அமைந்துள்ளன.

முஸ்லிம் தலைவர்களும் ஏனைய அரசியல்வாதிகளும், தேர்தல் காலத்தில் வாக்குகளை அறுவடை செய்வதற்காக பெரும் வீரர்கள் போலவும், சமூக அக்கறையுள்ளவர்கள் போலவும், செயல் வீரர்களாகவும் தம்மை பிரதிவிம்பப்படுத்துகின்றனர்.

ஆனால், தமது தேவை முடிந்தவுடன் அரசியல் செயற்பாட்டுக் களத்தில் காணாமல் போய், ஒரு மூலையில் ஒதுங்கிக் கொள்கின்றனர். காரியம் முடிந்த பிறகு சமூகத்திற்கும் அவர்களுக்கும் இடையிலான உண்மையான தொடர்பு என்பது மருவிப் போய்விடுவதையே ஆண்டாண்டு காலமாக காண்கின்றோம்.

அரசியல் என்பது ஒரு சீசனுக்கான தொழில் அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதிகாரத்தில் இருக்கின்ற எம்.பி.க்கள் மட்;டுமன்றி இதற்கு முன்னர் அதனைச் சுகித்தவர்கள் மற்றும் எதிர்காலத்தில் அப்பதவிகளை அவாவி நிற்பவர்களும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருப்பது அவசியமாகும்.

அதுபோலவே, நாங்கள் அரசியல் விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்துவோம் என்று அரசியல்வாதிகள் சொல்லவும் முடியாது. குறிப்பாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் தலைவர்களுக்கும் இதில் தார்மீகப் பொறுப்பிருக்கின்றது.

அரசியல் சார்ந்த விவகாரங்களில் மட்டுமன்றி, நாட்டில் இடம்பெறுகின்ற எல்லா சமூக, பொருளாதார, சுகாதார, பாதுகாப்பு விவகாரங்களிலும் தமது கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். இது சேவை அல்ல. மாறாக, வாக்களித்த மக்களுக்கு, பெறுகின்ற சம்பளம் மற்றும் வரப்பிரசாதங்களுக்காக செய்ய வேண்டிய பிரதியுபகாரம் ஆகும்.

இன்று இலங்கையில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இது இதற்கு முன்னர் ஏற்பட்ட நெருக்கடிகளை விட வேறுபட்டதும் தீவிரமானதுமாக இவை காணப்படுகின்றன. கொவிட்-19 வைரஸ் பரவல் மட்டுமே இதற்கு காரணம் என்பதான ஒரு தோற்றப்பாட்டை அரசாங்கம் ஏற்படுத்த முனைந்தாலும், உண்மை அதுவல்ல.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றது. ஆளும் தரப்பிற்குள்ளேயே ஆயிரத்தெட்டு கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஒவ்வொரு பெருந்தேசியக் கட்சியும் அதன் தலைவர்களும் தங்களுக்கு 'வசதியான புள்ளியில்' நின்று கொண்டு, நடப்பு விவகாரங்களை கையாள நினைக்கின்றனர்;.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் காலதாமதமான முடிவுகளும், அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சுகாதார தரப்பினருக்கு முன்னுரிமை கொடுக்கப்படாமையாலும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறுவது கல்லில் நார் உரிக்கின்ற காரியமாகியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல பொருட்களுக்கு உத்தியோகபூர்வமாக விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சிலவற்றுக்கு பதுக்கல் வியாபாரிகள் விலைகளை உயர்த்தியுள்ளனர்.

'பொருட்களுக்கு எவ்விதத் தட்டு;ப்பாடும் இல்லை, விலையை அதிகரித்து விற்பனை செய்ய முடியாது' என்று அரசாங்கம் என்னதான் கூறினாலும், யதார்த்தம் என்பது வேறு விதமாகவே உள்ளது. இந்தச் சூழல் இன்னும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகின்றது என்பதை எளிதில் முன்கணிக்க முடியாதுள்ளது.

ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் சமூகத்தின் வழக்கமான பிரச்சினைகளை அல்லது மேற்குறிப்பிட்ட சமகால நாட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக என்ன முயற்சிகளை எடுத்துள்ளனர். எந்தவிதமான பங்களிப்பை வழங்கியுள்ளனர்? இந்தக் கேள்விக்கு அவர்களிடமே விடை இருக்காது.

ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்றால், நாடாளுமன்ற உறுப்பினர் என்றால், முதற்கண்; தாம் சார்ந்த மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். சமகாலத்தில் இனம், மதம் கடந்து ஏனைய மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் பங்களிப்புக்களை வழங்க வேண்டும்.

இந்த அளவுகோல்களின் படி முஸ்லிம் அரசியல்வாதிகள் எதனைச் சாதித்திருக்கின்றார்கள் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களுக்கு நீண்டகால மற்றும் குறுங்கால பிரச்சினைகள் உள்ளன. இப்படிச் சொன்னால் சில அரசியல்வாதிகள் அந்தப் பிரச்சினைகளை என்னவென்று நம்மிடமே கேட்பார்கள். ஏனெனில் இந்த சமூகத்தின் பிரச்சினைகளை எந்த முஸ்லிம் கட்சித் தலைவரும் எம்.பி.யும் முறையாக ஆவணப்படுத்தவில்லை.

நாட்டின் எல்லாப் பாகங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு காணிப் பிரச்சினைகள் உள்ளன. முஸ்லிம்களின் சனத்தொகைப் பரம்பலுக்கு ஏற்ப காணிகள் இல்லை என்பது ஒருபுறமிருக்க, இலட்சக்கணக்கான ஏக்கர் காணிகளின் உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டு உள்ளன.

அரசாங்கங்கள் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக பேசி வருகின்றன. இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது அண்மைக்காலமாக விதமாக அணுகப்படுவதாக தெரிகின்றது. அரசியலமைப்பு மறுசீரமைப்பு, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அல்லது அதற்குச் சமமான அதிகாரப் பகிர்வை வழங்குதல் பற்றியெல்லாம் பேசப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றியும் சமஷ;டி முறையை ஒத்த ஒரு அதிகார அலகு பற்றியும் தமிழ் தரப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. இவ்வாறான ஒரு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டால் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன? என்பது பற்றி தொடர்ச்சியாக தெளிவுபடுத்தும் வேலையை முஸ்லிம் தலைவர்கள் செய்திருக்க வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற உரிமை மீறல்கள் இன்று உலக அரங்கிலேயே பேசப்படுகின்றன. முஸ்லிம்களுக்கு ஆயுதக் குழுக்களாலும் இனவாதிகளாலும் நிகழ்த்தப்பட்ட உரிமை மீறல்கள் பற்றி எடுத்துரைத்து, அதற்கான நீதியை கோர வேண்டியது அவசியமாகும். ஆனால், அதனை முஸ்லிம் எம்.பிக்கள் செய்யத் தவறிவிட்டனர்.

எத்தனை நெருக்கடிகள் வந்தாலும், அதனோடு இணைந்ததாக அரசியலை முன்கொண்டு செல்லும் கலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற அரசியல் அணிகள் கற்றுக் கொண்டுள்ளன.

அந்த வகையில் இத்தனை குழப்பங்களுக்கு மத்தியிலும், அரசியலமைப்பு மறுசீரமைப்பு பணிகளை தாமதிக்க வேண்டாம் என்று இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு அண்மையில் கூட கடிதம் எழுதியிருந்தார். அத்துடன், கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். ஆனால், முஸ்லிம் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இதுபற்றி உருப்படியாக எதனையும் செய்ததாக தெரியவில்லை. மாறாக, தாம் சார்ந்த பெருந்தேசியக் கட்சிகளின் விசிறிகளாக இருப்பதற்கே அவர்கள் பிரயத்தனப்படுகின்றனர்.

ஒரு தரப்பு 'எதிர்க்கட்சியில் இருந்தால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது' என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் ஆளும் கட்சியில் இருந்து கொண்டு 'ஜால்ரா' அடித்துக் கொண்டிருக்கின்றனர். வேறு சிலர் 'அரசாங்கத்தை கவிழ்க்க யாரும் முயற்சிக்கக் கூடாது' என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முன்னர், ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான சிக்கல்கள் இருப்பதால் எதனையும் கவனமாகவே கையாள வேண்டும் என்று சொல்லி, மௌனியாக இருந்தார்கள். இப்போது, சமூகத்திற்காக எதையும் செய்யாதிருக்கின்றீர்களே என்ற குற்றச்சாட்டை முன்வைத்தால், 'ரெடிமேட்' ஆக ஒரு பதில் சொல்வார்கள்.

'இது கொரோனா காலம்தானே. எப்படி இப்போது அரசியல் பேசுவது? என்பதே அப்பதில் ஆகும்;. இன்னும் சிலர், 'இந்த அரசாங்கத்தில் நாம் குரல் கொடுத்தால் நடந்து விடுமா? அண்ணன் தம்பிமார் நினைப்பதையே செய்வார்கள்' என்பார்கள்.

சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் இதுவெல்லாம் தெரியாமலா தமது அபிலாஷைகளை தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு அழுத்தமாக உரைக்கின்றனர்?

சரி, முஸ்லிம் அரசியல்வாதிகள் சொல்வது நியாயம் எனக் கருதினால், பொய்க் காரணங்களைக் கூறிக் கொண்டு வாழாவிருப்பதற்கு... தலைவர்களும் எம்.பி.க்களும் இத்தனை பந்தாக்களும் எதற்காக?

வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் தமது அபிலாஷகளை, பிரச்சினைகளை முன்வைப்பதற்காகவே தமது பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றனர். அப்பணியை சிங்கள, தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் நுட்பமாகச் செய்ய வேண்டும்.

இப்போது அதனைத்தான் செய்ய முடியாவிட்டால், கொரோனாவை கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கலாம். மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட களத்தில் இறங்கியிருக்க வேண்டும். அதனையும் காணமுடியவில்லை.

ஆனால் அடுத்த வாரம் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டால், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மீட்பர்கள் எல்லோரும் மடித்துக் கட்டிக்கொண்டு களத்தில் குதிப்பார்கள் என்பது வேறுகதை. உண்மையில், அரசியல் என்பது எல்லாக் காலத்திலும் தேனிலவாக, சாதகமான களமாக இருக்க மாட்டாது. அப்படி நினைப்பவர்கள் அரசியலில் அடிச்சுவடி கூடக் கற்காதவர்களாவர். எனவே, எல்லா விதமான சூழலிலும் மக்கள் சார்ந்த செயற்பாட்டு அரசியலை உயிரோட்டமாக வைத்திருக்க வேண்டும். 'ஆடத் தெரியாதவன் மேடை கோணல்' என்ற கதை இனியும் சரிப்பட்டு வராது.

## கழதங்கள்

### தளங்கள் கூடுதலாக வேண்டும்

கிராமங்களில் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக நெல்லினை வீதியில் விவசாயிகள் உலர விடுகின்றனர். இந்நிலையில், நெல்லை உலர விடுவதற்கு, கூடுதலான தளங்கள் வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத் துறையில் கடந்த பத்தாண்டுகளில் பாரிய முன்னேற்றம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. நிலத்தினைப் பண்படுத்துதல், விதைப்புகள், அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடைகள் என்பன இடம் பெற்றாலும் உலர விடும் தளங்கள் போதியளவில் கிராமங்களில் காணப்படாததன் காரணமாக விவசாயிகள் நெல் மூடைகளை வீதிகளுக்கு எடுத்து வந்து நெல்லினை உலர விடுகின்ற அவலம் முல்லைத்தீவில் காணப்படுகின்றது.

நெல்லினை உலர விடுவதற்கான வசதிகள் இல்லாததன் காரணமாகவே அறுவடை முடிந்தவுடன் நெல்லினை பேரம் பேசும் சக்தியற்ற நிலையில் விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லினை விற்பனை செய்கின்ற நிலையும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடுதலான நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும். களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும். நெல் சந்தைப்படுத்தும் சபை தனியாருக்கு முன்னரே கிராமங்களுக்குச் சென்று நெல்லினை கொள்வனவு செய்ய வேண்டும். இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டால்தான் நெல் உற்பத்தியில் முல்லைத்தீவு மாவட்டம் தன்னிறைவு அடையும் என்றும் தெரிவித்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்



மயிலாடுதுறை

### கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு

# விசாரணைக்கு கோருவதில் தவறில்லை

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தக் கோருவதில் தவறு ஏதும் இல்லை என சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் எலந்தங்குடியில் நடந்த விழாவில் பங்கேற்ற சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார், பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம் வேண்டாம் என்று கூறியதை வரவேற்பதாக தெரிவித்த சரத்குமார், உள்ளாட்சித் தேர்தல் கூட்டணி குறித்து மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட இருப்பதாகக் கூறினார்.



செஞ்சி

### பச்சிளம் குழந்தையை தாக்கிய

## பாசமற்ற தாயின் கொடூரச் செயல்



பச்சிளம் குழந்தையைக் கடுமையாகத் தாக்கி, வீடியோவில் பதிவிட்ட கொடூரத் தாயை, ஆந்திரா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி. இவருக்கும், ஆந்திர மாநிலம், சித்துார் அடுத்த ராம்பள்ளியைச் சேர்ந்த பெண்ணுக்கும் 2016ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. இவர்களுக்கு இரண்டு மகன்கள். தம்பதி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டதால், ஒன்றரை மாதத்துக்கு முன் கணவன், மனைவியை மட்டும் அவரது தாய் வீடான சித்துாருக்கு அனுப்பி விட்டுள்ளான்.

இந்நிலையில்,மனைவி விட்டுச் சென்ற கையடக்க தொலைபேசியில் இருந்த 'வீடியோ'க்களை கணவன் பார்த்துள்ளான். அதில், கடந்த பெப்ரவரி மாதம் மனைவி, குழந்தையின் வாயில் பல முறை குத்தி இரத்தம் சொட்டும் காட்சியும், குழந்தையின் பாதத்தில் தொடர்ந்து பல முறை குத்தியதில் கால் எலும்புகள் உடைந்து குழந்தை துடிதுடிக்கும் வீடியோக்கள் இருந்துள்ளன.அப்போது, இந்த காயங்கள் குறித்து கேட்டபோது, குழந்தை தவறி விழுந்ததால் ஏற்பட்டது என கணவனிடமும், குடும்பத்தாரிடமும் மனைவி தெரிவித்துள்ளார்.

இந்த வீடியோக்களை கணவன், தனக்கு தெரிந்தவர்களுக்கு அனுப்பியுள்ளார். அது, தமிழகம் முழுதும், 'வட்ஸ்அப்' குறூப்பில் வேகமாக பரவியது.

திருச்சி

### வக்பு வாரியத்துக்கு

## பெரும் சிக்கல்



சொத்துகளை மீட்போம்

ஆக்கிரமிப்பில் உள்ள மற்றும் முறைகேடாக விற்பனை செய் யப்பட்ட தமிழ்நாடு வக்பு வாரியத்தின் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை மீட்கும் நடவடிக்கைகள் தொடங்கப் பட்டுள்ளன என தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில முதன்மை துணைத் தலைவருமான எம்.அப்துல் ரகுமான் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தி யாளர்களிடம் அவர் கூறியது:

ஆக்கிரமிப்பிலுள்ள மற்றும் போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்ட, வக்பு வாரியத்துக்குச் சொந்தமான பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து களைக் கண்டறிந்து, அவற்றை மீட்டெடுக்கும் மிகப் பெரிய பணியைத் தொடங்கியுள்ளோம்.

ஆட்சி, அதிகாரம், செல்வாக்கு, பண பலம் ஆகியவற்றை பயன்படுத்தி, இதுபோன்ற அத்துமீறல்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், எவ்வித பாரபட்சமும் பார்க்காமல் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதில் எந்த தயக்கமும் காட்ட வேண்டாம் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

வக்பு வாரிய சொத்துகளைப் பராமரிக்கும் பணியில் மதரஸாக்கள், தர்காக்கள் உள்ளிட்ட நிர்வாகங்களுக்கு இடையே பல்வேறு மோதல்கள், குற்றச்சாட்டுகள் உள்ளதால், அந்த நிர்வாகங்களைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை வக்பு வாரியம் சட்டரீதியாக மேற்கொண்டு வருகிறது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலச் செயலாளர்கள் காயல் மகபூப், மில்லத் எம்.பி.முகம்மது இஸ்மாயில், தென் சென்னை மாவட்டச் செயலாளர் மடுவை எஸ்.பீர்முகம்மது, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை ஒருங்கிணைப்பாளர் கோம்பை ஜெ.நிஜாமுதீன், திருச்சி மாவட்ட நிர்வாகி அப்துல் முத்தலிப் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



### வடிவேலு விவகாரத்தில்

# தடை நீங்கியது

இயக்குநர் ஷங்கர் தயாரிப்பில், சிம்புதேவன் இயக்கி, வடிவேலு நடித்த 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' திரைப்படம் 2006ஆம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்றது.

அதைத்தொடர்ந்து அந்தத் திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தை தயாரிக்க ஷங்கர் முன்வந்தார். இந்தத் திரைப்படத்திலும் கதாநாயகனாக நடிக்க வடிவேலு ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இந்தத் திரைப்படத்துக்காக அவருக்கு ரூ.12 கோடி சம்பளம் பேசப்பட்டதாகவும், அதற்கு 'முன்பணம்'ஆக ரூ.5 கோடி கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதையடுத்து திடீரென்று அந்தத் திரைப்படத்தில் இருந்து வடிவேலு நடிக்க மறுத்து விலகினார்.

இதுபற்றி தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தில் ஷங்கர் புகார் அளித்தார். இதனால் நடிகர் வடிவேலு புதிய திரைப்படங்களில் நடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த விவகாரத்தில் தற்போது தீர்வு ஏற்பட்டுள்ளது. வடிவேலு வாங்கிய 'முன்பணம்' தொகை ரூ.5 கோடியை இயக்குநர் ஷங்கரிடம் திருப்பிக் கொடுக்கும்படி, பஞ்சாயத்தில் தீர்ப்புக் கூறப்பட்டது.

வடிவேலு கொடுக்க வேண்டிய ரூ.5 கோடியை, அவரை வைத்து திரைப்படம் தயாரிக்கும் ஒரு திரைப்பட நிறுவனம், ஷங்கரிடம் திருப்பி கொடுத்ததால், இந்தப் பிரச்சினையில் சமரசம் ஏற்பட்டு சுமுகமாக முடிந்ததாக கூறப்படுகிறது. இதன்மூலம் வடிவேலு திரைப்படங்களில் நடிக்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.



### நாட்டாமை நடிகருக்கு

## நடுராத்திரியில் சர்பிரைஸ்

தமிழ் சினிமாவில் பழம்பெரும் நடிகராகவும் மூன்று தலைமுறை நடிகர்களுடன் நடித்து தனக்கென நீங்கா இடம்பிடித்தவருமான நடிகர் விஜய்குமார் தன்னுடைய பிறந்தநாளை நேற்று முன்தினம் கொண்டாடியுள்ளார்.

அவருக்கு அவருடைய மகள்களான அனிதா, ஸ்ரீதேவி, ப்ரீத்தா ஆகிய 3 பேரும் சர்ப்ரைஸ் கொடுத்த காட்சி இணையத்தில் வைரலாகி வருகிறது.

நடிகர் விஜய்குமார், 1943ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29ஆம் திகதி தஞ்சாவூரில் பிறந்தவர். இவர் நடிகர் சிவாஜிகணேசன் நடித்த "ஸ்ரீவள்ளி" திரைப்படத்தில் 1961ஆம் ஆண்டு அறிமுகமானார்.

அடுத்து ஒருசில திரைப்படங்களில் துணைக் கதாப்பாத்திரத்தில் நடித்த இவர், இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் இயக்கத்தில் வெளியான "அவள்ஒரு தொடர்கதை" திரைப்படத்தில் ஹீரோவாகவும் நடித்திருந்தார்.

1994ஆம் ஆண்டு கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் வெளியான "நாட்டாமை" நடிகர் விஜய்குமாருக்கு இன்னொரு மைல்கல் திரைப்படமாக அமைந்தது.

இந்த நாட்டாமையை இன்றளவும் மறக்காத தமிழ் ரசிகர்கள் நடிகர் விஜயக்குமாரை சில நேரங்களில் நாட்டாமை என்றே அழைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் விஜயக்குமார் தன்னுடைய மகள்கள், பேரக் குழந்தைகளுடன் பிறந்தநாள் கொண்டாடிய புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறன.

## மாஸ் காட்டும் பகத் பாசில்



சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிக்கும் திரைப்படம் புஷ்பா. அல்லு அர்ஜுனுக்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார்.

செம்மரக்கடத்தலை மையமாக வைத்து உருவாகும் இந்தத் திரைப்படத்தில் அல்லு அர்ஜுன் லொறி சாரதியாக நடிக்கிறார். பிரபல மலையாள நடிகர் பகத் பாசில் வில்லனாக நடிக்கிறார்.

பகத் பாசிலின் வில்லன் போஸ்டர் தற்போது வெளியாகியுள்ளது. மொட்டை தலையுடன் மாஸாக இருக்கும் இந்த போஸ்டர் ரசிகர்களை கவர்ந்து சமூக வலைத்தளத்தில் வைரலானது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய 5 மொழிகளில் உருவாகும் இந்தத் திரைப்படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார்.

இந்தத் திரைப்படத்தை இரண்டு பாகங்களாக வெளியிட உள்ளதாக ஏற்கெனவே அறிவித்திருந்த படக்குழு, முதல் பாகம் டிசெம்பர் மாதம் திரையரங்குகளில் வெளியிடப்படும் என அறிவித்துள்ளது.

மதுரை

## 'வந்தால் கைது செய்யப்படுவார்'!



'மதுரை ஆதீன மடத்துக்குள் நித்யானந்தா வந்தால் கைது செய்யப்படுவார்' என மதுரை ஆதீனம் ஹரிஹரி ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் எச்சரித்து உள்ளார்.

மதுரை ஆதீன மடத்தின் 292ஆவது பீடாதிபதி அருணகிரிநாதர் இறந்ததைத் தொடர்ந்து, நித்யானந்தா அடுத்த ஆதீனமாக தன்னைத் தானே அறிவித்துக் கொண்டார். இச்சூழலில் அண்மையில் மதுரை ஆதீனமாக ஹரிஹரி ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பொறுப்பேற்றார்.

நேற்று மதுரையில் சிலை திறப்பு வைபவத்தில் பங்கேற்ற, நித்யானந்தா கூறுகையில், ''அவன் ஒரு பொருட்டே இல்லை. மடத்துக்குள் நுழைந்தால் கைது செய்யப்படுவான்,'' என்றார். தொடர்ந்து அவர் கூறியதாவது: மதுரை ஆதீன மடத்தின் சார்பில், ஐந்து விருதுகள் வழங்கப்பட உள்ளன. எந்நேரமும் மடத்துக்கு வந்தால் அன்னதானம் உண்டு.

சண்டிகர்

## விவசாயிகள் மீது தடியடி



ஹரியானாவில் விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து, மகா பஞ்சாயத்து கூட்டத்தை விவசாயிகள் நடத்தினர்.

மத்திய அரசாங்கத்தின் மூன்று புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாநிலத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். கேர்னல் மாவட்டத்தில் பாரதிய ஜனதா கூட்டத்துக்கு செல்லும் வழியில், மாநில பா.ஜ., தலைவர் ஓம் பிரகாஷ் தன்கரின் காரை வழிமறித்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். பொலிஸார் நடத்திய தடியடியில் 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் காயமடைந்தனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இதைக் கண்டித்து ஹரியானாவின் நூ மாவட்டத்தில் விவசாயிகளின் மகா பஞ்சாயத்து கூட்டம் நடந்தது. அதில் விவசாய சங்க தலைவர்கள் பங்கேற்றனர். ஜலந்தர் - டெல்லி இடையிலான தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து முடங்கியது.

பொலிஸாரின் தடியடி குறித்து, முதலமைச்சர் மனோகர்லால் கட்டார் கூறியதாவது: அமைதியான முறையில் போராட்டம் நடத்தினால்,அதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எனினும், பொலிஸார் மீது கற்களை வீசி, நெடுஞ்சாலைகளை முடக்கினால் பொலிஸார் தக்க நடவடிக்கையை எடுப்பர். இவ்வாறு அவர் கூறினார்.

## சுப்பர்ஹிட்டில் கீர்த்தி சுரேஷ்



கதாநாயகிகளை மையமாக வைத்து உருவாகும் திரைப்படங்களுக்கு பொலிவுட்டில் அதிக வரவேற்பு கிடைத்து வருகிறன.

அந்த வகையில் கடந்த மாதம் கீர்த்தி சனோன் நடிப்பில் கடந்த மாதம் ஓடிடியில் வெளியான திரைப்படம் 'மிமி'. இது கடந்த 2011ஆம் ஆண்டு மராத்தி மொழியில் வெளியான 'மலா அய் ஹய்ச்சி' திரைப்படத்தின் ஹிந்தி ரீமேக் ஆகும்.

இந்தத் திரைப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருந்தார். பரம் சுந்தரி பாடல் பட்டிதொட்டியெங்கும் கலக்கியது. கீர்த்தி சனோன் நடிப்புக்கு பாராட்டுகளும் கிடைத்தன.



இந்நிலையில், மிமி திரைப்படம் தற்போது தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் ரீமேக் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இரண்டு மொழிகளிலுமே கீர்த்தி சனோன் கதாபாத்திரத்தில் கீர்த்தி சுரேஷை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருவதாகக் கூறப்படுகிறது.




ஆப்கானிஸ்தான்

குடிநீர் போத்தலின் விலை 8 ஆயிரம் ரூபாய்

# தவிக்கும் ஆப்கான் மக்கள்

## பெண்கள், சிறுமிகளின் நிலை கேள்விக்குறி

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில் அங்கு சிக்கியுள்ள தங்கள் நாட்டுக் குடிமக்களை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் விமானம் மூலம் மீட்டு வருகின்றன.

சொந்த நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் ஆப்கான் மக்களையும் சில நாடுகள் மீட்டு வருகின்றன. இதற்காக காபூல் விமான நிலையத்தை அமெரிக்கப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன.

இந்நிலையில் குறித்த விமான நிலையத்தில் ஒரு குடிநீர் போத்தலின் விலை இலங்கை மதிப்பில் சுமார் 8,000 (40 டொலர்கள்) ரூபாவுக்கும், உணவுப் பொதியொன்று சுமார் 20,000 ரூபாவுக்கும் (100 டொலர்கள்) விற்கப்படுவதாக அங்கு சிக்கித்தவிக்கும் ஆப்கான் பிரஜை ஒருவர் பிரபல செய்திச் சேவையான ரொய்டர்ஸ் க்குத் தெரிவித்துள்ளார். மேலும், அங்கே நிலவும் மோசமான சூழலை அடுத்து அவ்வப்போது அங்குள்ள மக்களுக்கு அமெரிக்க பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் தண்ணீர்ப் போத்தல்களை இலவசமாக வழங்கி வருகின்றனர்,

அதேபோல, இவ்விமான நிலையத்தில் சிக்கித்தவிக்கும் பெண்கள், சிறுமிகளின் நிலை மிகவும் கேள்விக்குறியாக இருப்பதாக அங்கிருப்பவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இவர்கள் விரைவாகவே மீட்கப்படவேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.



ஏமன்

பயங்கரவாத தாக்குதல்

# இராணுவ வீரர்கள் 30 பேர் உயிரிழப்பு

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில் ஜனாதிபதி மன்சூர் ஹைதி அங்கம் வகிக்கும் சன்னி பிரிவிற்கும் , ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது .

இதில் ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கு சவுதி அரேபியாவும், ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரானும் ஆதரவு அளித்து வருகின்றன.

இந்நிலையில் ஏமனில் நேற்று முன்தினம் (29) ஹவுத்தி படைகள் நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர்கள் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன் 60க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஏமன் இராணுவ அதிகாரி நஸிர் கூறும்போது, "எங்களால் ஒரு ஏவுகணையைக் கூட தாக்க முடியவில்லை. கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் பலர் பலியாகினர். மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. ஏவுகணைத் தாக்குதலால் தரைமட்டமான கட்டிடங்களில் இன்னும் பலர் சிக்கிக் கொண்டுள்ளனர்" என்றார்.

சில நாள்களுக்கு முன்னர் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் போரில் குழந்தைகளைப் பயன்படுத்துவதாக ஏமன் அரசு குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனா

பிரமாண்ட கேளிக்கை

# பூங்கா நாளை திறக்கப்படும்

சீனாவில் உள்ள யுனிவர்சல் பெய்ஜிங்உல்லாசக் களிப்பிடத்தில் கடந்த 4 ஆண்டுகளாகக் கட்டப்பட்ட கேளிக்கை பூங்காவொன்று, நாளை ( 01 ) திறக்கப்படவுள்ளது.

தலைநகர் பெய்ஜிங்கில் 990 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குறித்த உல்லாசக் களிப்பிடத்தில் 130 ஏக்கர் பரப்பளவில் இக்கேளிக்கை பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரிய பொருள்செலவில் அமைக்கப்பட்டுள்ள இப் பூங்காவில் பார்வையாளர்களுக்குப் பரவசமூட்டும் விதமாக ஜுராஸிக் பார்க் (Jurassic Park), ஸ்டிரான்ஸ்போமர்ஸ் (Transformers), ஹரிபொட்டர் (Harry Potter) போன்ற பிரபல ஹொலிவூட் திரைப்படங்களில் வருவதைப் போன்ற பிரமாண்ட செட்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அமெரிக்கா

# ஐஸ்கிரீமை சுமந்து சென்ற 'ஸ்பேஸ் எக்ஸ்




பூமியில் இருந்து 408 கிலோ மீற்றருக்கு அப்பால் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து இந்த ஆய்வு மையத்தை நிறுவியுள்ளன. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இங்கு சுழற்சி முறையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்ஆய்வுப் பணிக்குத் தேவையான பொருள்கள் மற்றும் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவுகள், விண்கலங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா மற்றும் தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் ஆகியவை இணைந்து 2,170 கிலோகிராம் எடையுள்ள பொருள்களை பால்கன் 9 ரொக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பியுள்ளன.

ஜப்பான்

ஒகினாவாவில்

# மொடர்னா தடுப்பூசிக்குத் தடை





ஜப்பான், ஒகினாவா பகுதியில் கொரோனாத் தொற்றுக்கான மொடர்னா தடுப்பூசியைச் செலுத்திக்கொண்ட சுமார் 30 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளமையையடுத்து அப்பகுதியில் அதன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே, இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஜப்பான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மொடர்னா நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "இந்த மரணங்கள் எமது தடுப்பூசியால் ஏற்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை, மேலும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பதை அறிய முறையான விசாரணை நடத்துவது முக்கியம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்திக் கொண்ட சில நாள்களிலேயே இம்மரணங்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.




தினேஸ் பிரியந்த ஹேரத்



துலான் கொடித்துவக்கு

பரா ஒலிம்பிக் போட்டிகளில்

# இலங்கை வீரர் உலக சாதனை

ஜப்பான் டோக்கியோவில் இடம்பெற்று வரும் பரா ஒலிம்பிக் (மாற்றுத்தி றனாளிகளுக்கானது) போட்டிகளில் இலங்கை வீரரான தினேஸ் பிரியந்த ஹேரத் உலக சாதனை படைத்துள்ளார். ஒகஸ்ட் 30ஆம் திகதி (நேற்று) நடைபெற்ற F46 ஈட்டி எறிதல் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை வீரர் தினேஸ் பிரியந்த ஹேரத் இந்த சாதனையை படைத்துள்ளார். அவர் 67.79 மீற்றர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து இந்த சாதனையை புரிந்துள்ளார்.

64.35 மீற்றர் தூரத்துக்கு ஈட்டி எறிந்த இந்திய வீரரான தேவேந்திந்திய ஜஜாரியா வெள்ளிப்பதக்கத்தையும் மற்றுமோர் இந்திய வீரரான சுந்தர் சிங் 64.01 மீற்றர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து வெண்கல பதக்கத்தை தனதாக்கிகொண்டார்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டு பிரேஸிலில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றிருந்த இலங்கை வீரர் தினேஸ் பிரியந்த ஹேரத், இதே ஈட்டி எறிதல் போட்டியில் பங்குபற்றி, வெண்கலம் பதக்கத்தை தனதாக்கிகொண்டார்.

இலங்கை வீரர் தினேஸ் பிரியந்த ஹேரத், இலங்கை இராணுவத்தில் பணியாற்றியவர் ஆவார். 2008 ஆம் ஆண்டு அவரது இடது கையில் துப்பாக்கி சன்னம் பாய்ந்துள்ளது. கையின் தசைகளின் வலிமை சேதமடைந்ததால் அவர், மாற்றுத்திறனாளிகளுக்கான குழுவில் இணைக்கப்பட்டார்.

அனுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி விளையாட்டு விருது வழங்கல் விழாவின் போது, மிகச்சிறந்த பரா விளையாட்டு வீரராக தெரிவு செய்யப்பட்டார். .இந்தோனேசியாவில் 2018 ஆசிய பாரா விளையாட்டு தொடக்க விழாவின் போது அவர் இலங்கை கொடியை ஏந்தி சென்றார்.

இதேவேளை, 2020 பரா ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் எஃப் 64 போட்டியில் 65.61 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இலங்கையின் துலான் கொடித்துவக்கு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.






கேப்டன் ஜோ ரூட் இலண்டன்

இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்

# இங்கிலாந்து அணி அறிவிப்பு


இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. தற்போது 1-1 என்ற கணக்கில் சமனில் உள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி முடிந்தது. இரண்டாவது டெஸ்டில் இந்தியா 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மூன்றாவது டெஸ்டில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் செப்டம்பர் 2 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்நிலையில், இந்தப் போட்டிக்கான 15 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணியில் இடம் பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு:

# 'தோல்வியால் துவண்டு விடமாட்டோம்'



இங்கிலாந்துக்கு எதிராக லீட்சில் நடந்த 3 ஆவது டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இதனால் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலைக்கு வந்துள்ளது. இவ்விரு அணிகள் மோதும் 4 ஆவது டெஸ்ட் எதிர்வரும் 2 ஆம் திகதி இலண்டன் ஓவலில் தொடங்குகிறது.


3 ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்சில் இந்தியா வெறும் 78 ஓட்டங்களால் சுருண்டதால் கடும் விமர்சனம் எழுந்த நிலையில் "அடுத்த டெஸ்டில் சரிவில் இருந்து மீள்வோம்" என்று இந்திய கேப்டன் விராட் கோலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஓபன் டென்னிஸ்

# ஆரம்பமானது



ஆஷ்லே பார்ட்டி



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நேற்று (30) தொடங்குகிறது. இதில் அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீரர் என்ற சாதனையை படைக்கும் உத்வேகத்துடன் நம்பர் ஒன் வீரர் ஜோகோவிச் தயாராகியுள்ளார்.

ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என்று 4 வகையான 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகிறது.

இதில் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் திருவிழா நியூயார்க் நகரில் நேற்று (30) தொடங்கி 12 ஆம் திகதி வரை நடக்கிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்த ஆண்டில் ஏற்கனவே 3 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் வாகை சூடிய நம்பர் ஒன் வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மீது பலத்த எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஏனெனில் இங்கு அவர் பட்டம் வென்றால் அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீரர் என்ற புதிய சாதனையை நிகழ்த்துவார்.

# ஜிம்பாப்வேயை வீழ்த்தியது அயர்லாந்து



அரை சதமடித்த கெவின் ஓ பிரையன்



அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள ஜிம்பாப்வே அணி, ஐந்து டி-20 போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டி-20 போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே வெற்றி பெற்றது.

இந்நிலையில், அயர்லாந்து, ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டி-20 போட்டி டப்ளினில் நேற்று முன்தினம் (29) நடைபெற்றது. டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்து ஆடுவதற்கு முடிவு செய்தது.

அந்த அணியின் முன்னணி வீரர்கள் விரைவில் மைதானத்தை விட்டு வெளியேறினர். 64 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை அவ்வணி இழந்தது.

6 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மில்டன் ஷம்பா, ரியான் பர்ல் பொறுப்புடன் ஆடினர். இந்த ஜோடி 88 ஓட்டங்களை சேர்த்தது. ஷம்பா 46 ஓட்டங்களுடனும் பர்ல் 37 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 152 ஓட்டங்களை எடுத்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 31 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.